Holland Bloorview
Kids Rehabilitation Hospital

# Opioid (ஓபியாயிட்) மருந்து பாதுகாப்பு வழிகாட்டி

குடும்பங்களுக்கான முக்கியமான குறிப்புகள்

This document was client & family reviewed™

## Opioid (ஓபியாய்ட்)கள் என்பவை பாதுகாப்பாகவும் பயனுள்ள முறையிலும் வலியைச் சமாளிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய மருந்துகள் ஆகும். இந்த முக்கியமான மருந்துகளை எப்படிப் பயன்படுத்துவது என்று உங்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

Opioid (ஓபியாயிட்) மருந்து உதாரணங்களில் morphine, hydromorphone and oxycodone. (மார்பைன், ஹைட்ரோமார்போன் மற்றும் ஆக்ஸிகோடோன்) அடங்கும்.

Health Canada (கனடா சுகாதாரம்) துறையின் நிபந்தனையின்படி, Opioid (ஓபியாயிட்) மருந்துப் பெட்டிகளில் இந்த எச்சரிக்கை ஒட்டப்பட்டிருக்க வேண்டும், மற்றும் “Opioid (ஓபியாயிட்) மருந்துகள் - நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான தகவல்” துண்டு பிரசுரம் ஒன்றையும் உங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

> **! ஓபியாயிட் மருந்து சார்ந்திருத்தல், பழக்க அடிமை மற்றும் ஓவர்டோஸ் ஆகியவற்றிற்குக் காரணமாகும்**



ஓபியாயிட் மருந்துகள்

Health Canada Santé Canada

நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான தகவல்

**வலி அல்லது வேறொரு நிலைமைக்கு சிகிச்சையாக உங்களுக்கு ஓபியாயிட் மருந்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது.**

நீங்கள் இவற்றைத் தெரிந்துகொள்ள மருத்துவர் அல்லது மருந்து கடைக்காரரிடம் பேசவேண்டும்:

- உங்களுடைய ஓபியாயிட் மருந்து பற்றிய கேள்விகள் இருந்தால்.
- உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓபியாயிட் மருந்தை எவ்வாறு பயன்படுத்துவது என்று புரியவில்லை என்றால்.
- பக்க விளைவுகள் ஏற்பட்டால் அல்லது உங்களுடைய நிலைமை மோசமடைந்தால்.

| கடுமையான எச்சரிக்கைகள் | ஓவர்டோஸ் அறிகுறிகள் |
| --- | --- |
| • **ஓபியாயிட் ஓவர்டோஸ் மரணம் விளைவிக்கக்கூடும்.** அளவு அதிகமாக எடுத்துக்கொள்ளும்போது, அல்லது ஆல்கஹால் அல்லது மற்ற மயக்கமூட்டும் மருந்துகளுடன் சேர்த்து (தூக்க மாத்திரைகள், மன உளைச்சலுக்கான மருந்துகள், மனஅழுத்த நீக்க மருந்துகள், தசைத் தளர்வூட்டிகள் போன்றவை) நீங்கள் ஓபியாயிட் எடுத்துக்கொண்டால் ஓவர்டோஸ் ஆவதற்குச் சாத்தியம் உள்ளது.<br>• **ஓபியாய்டுகளை** பரிந்துரைக்கப்பட்டு பயன்படுத்தினாலும் கூட பழக்கத்திற்கு அடிமையாக முடியும்.<br>• **ஓபியாய்டுகளை தினசரி** பயன்படுத்தும்போது அதைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படலாம். இதனால் அதன் பயன்பாட்டை நிறுத்துவது சிரமமாகலாம். | • மாயத்தோற்றம்<br>• குழப்பம்<br>• நடப்பதில் சிரமம்<br>• அதிகப்படியான மந்தம் / தலைச்சுற்றல்<br>• மெதுவான அல்லது வழக்கத்துக்கு மாறான சுவாசம் |

## Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ)வில் நீங்கள் தங்கியிருக்கும் காலத்தில் உங்களுக்கு வழங்கப்படும் மருந்துகளைப் பற்றி நீங்கள் பேச விரும்புகிறீர்களா?

இவர்களுடன் பேசுங்கள்:

- மருந்து கடைக்காரர்
- மருத்துவர்
- செவிலியர்
- செவிலி பயிற்சியாளர்

## Opioid (ஓபியாயிட்) பாதுகாப்பாகப் பயன்படுத்தும் குறிப்புகள்

**இக் குறிப்புகளைப் பின்பற்றவும்**
மருந்து எடுத்துக்கொள்ளும் நேரத்தையும் அளவையும் மாற்றுவதால் ஆபத்துகள் நேரிடலாம். மருந்து லேபிலில் உள்ள மற்றும் உங்களுக்கு எழுதிக்கொடுத்தவர் சொல்லியிருக்கும் குறிப்புகளைப் பின்பற்றுங்கள்.

**பத்திரமாக வைக்கவும்**
உங்கள் மருந்தை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கவும். மருந்துகள் குழந்தைகள் மற்றும் செல்லப் பிராணிகளின் கண்களில் படாமலும், அவர்களுக்கு எட்டாத இடத்திலும் வைக்கப்பட வேண்டும்.

**பக்க விளைவுகள் தோன்றுவதைக் கவனியுங்கள்.**
மருந்துகளை எடுத்துக்கொள்ளும் காலத்தில் நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி உங்கள் மருத்துவரிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

**பொதுவான பக்க விளைவுகளில் இவை அடங்கும்:** மலச்சிக்கல், அரிப்புணர்வு, குமட்டல் மற்றும் வாந்தி, மயக்க நிலை

**குறிப்பிடத்தக்க பக்க விளைவுகளில் இவை அடங்கும்:** குறைவான இரத்த அழுத்தம், மேலோட்டமான சுவாசம், மெதுவான சுவாசம்

**லேபில் விவரத்தைக் கவனமாகப் படிக்கவும்.**
உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை மட்டுமே பயன்படுத்தவும். உங்களுடைய பெயர் பாட்டிலில் இல்லை என்றால், அந்த மருந்தைப் பயன்படுத்தக் கூடாது.

**பயன்படுத்தாத மருந்துகளைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்.**
பயன்படுத்தப்படாத மருந்துகள் அனைத்தையும் பாதுகாப்பாக அகற்றுவதற்கு அவற்றை Holland Bloorview (ஹாலந்து ப்ளூர்வியூ) அணியிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் பயன்படுத்தியிருக்காத உங்கள் மருந்துகளை ஒருபோதும் மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

**உங்கள் அணியுடன் பேசுங்கள்**
உங்களுக்கு இவை குறித்த கவலைகள் அல்லது கேள்விகள் இருந்தால் உங்கள் உடல்நல அணியிடம் தெரிவியுங்கள்:

- உங்களுக்கு இருக்கும் வலி
- உங்கள் மருந்துகள்
- ஏதேனும் புதிய மருந்துகளை முயற்சித்தல் (பரிந்துரைக்கப்பட்டவை அல்லது பரிந்துரையில்லாமல் கடையில் வாங்கியவை)
- வேறு ஏதாவது பிரச்சனைகள்

அவற்றை உடனே தெரியப்படுத்துங்கள்!

Opioid (ஓபியாயிட்)கள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு **AboutKidsHealth.ca** பக்கத்தைப் பார்க்கவும்.